# Chapter XXIII code of Criminal procedure

## DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SHOLINGANALLR

## DEPOSITION OF WITNESS

**Calender :**
**Miscellaneous : CC.No.439/2024**
**Preliminary Register :**
**Police Station :**

**Lw1/Pw1**

**Deposition of witness for :**
**:Kanathur PS**

**Name : Meenu Kalaiyarasan**
**:W/o. Arvindnarayanan**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.11.2024.**
**(Accused present)**

**முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் மேற்படி எனக்கு சொந்தமான Kia Seltos Car ஆன கடந்த 25.04.2022 அன்று எதிரி எடுத்துசென்றுவிட்டார் என்று சேலத்தில் இருந்த எனக்கு தகவல் கிடைத்தது. நான் தகவலை அறிந்து எனது பெற்றோர்களுடன் சேலத்தில் இருந்து சென்னைக்கு வந்தேன். எனது கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் இருந்த CCTV வில் ஆடியோ வீடியோ பதிவாகியிருந்தது. மேற்படி சிசிடிவி பதிவில் அர்ஜீன் என்பவர் காரை எடுத்து சென்றுள்ளார் என்பது தெரியவந்தது. காவல் நிலையத்தில் புகாரளிக்க சென்றபோது ஆய்வாளர்களே

மறுநாள் வருமாறு தகவல் தெரவித்தார். நான் புகாரளிக்க சென்றதை அறிந்துகொண்டு எதிரி மைத்துனர் என்னை தொடர்பு கொண்டு புகாரளித்து விட்டு உன்னால் வாழ்ந்து விட முடியுமா என்று மிரட்டல் விடுத்தார். மேலும் காவல் நிலையத்தில் புகாரளித்தால் கணவருடன் சேர்ந்து வாழ முடியாது என்று மிரட்டினார். அதனால் நான் உடனடியாக புகாரளிக்க பயந்தேன். அதற்கு பின் கடந்த 2022 நவம்பர் மாதத்தில் காவல் நிலையத்திற்கு சென்று எனது சொந்தமான காரை திருடிய சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகாரளித்தேன். நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் புகார்மனு என்னால் அளிக்கப்பட்டதுதான். **(மேற்படி புகார் மனு அசா ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து என்னை விசாரன செய்தபோது நடந்த முழு விவரத்தையும் தெரிவித்தேன். போலீசார் எனது காரை கண்டுபிடித்ததன் தகவலின் அடிப்படையில் நீதிமன்றத்தில் அளித்த இடைக்கால மனு பெற்று சென்றேன். நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள கார் என்னுடையது தான். **(மேற்படி 4 புகைப்படங்கள் அசா ஆ 2 (எண்ணிக்கை 4) ஆக குறியீடு செய்யப்படுகிறது.) ( மேற்படி கார் அசா பொ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் விசாரணையின் போது சிசிடிவி காட்சி பதிவுகள் மற்றும் பென்ரைவ் சிடிக்களை பிரிவு 65 பி இந்திய சாட்சி சட்டம் சான்றிதழ் மூலம் அளித்தேன். நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் சிசிடிவி கேமராக்களில் பதிவாகியுள்ள காட்சிகளை புகைப்படத்தாள் அசா ஆ 2 எண்ணிக்கை 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. **(நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் சிசிடிவி ஆடியோ வீடியோ பதிவுகள், பென்ரைவ் அசா ஆ 3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் சிசிடிவி பதிவுகள், சிடிகளின் பதிவிறக்கம் செய்யப்பட்ட சிடிக்கள் அசா ஆ 5 மற்றும் 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (நீதிமன்றத்தில் என்முன்பாக காண்பிக்கப்படும் பிரிவு 65 பி இந்திய சாட்சி சட்டம் என்னால் வழங்கப்பட்டது தான், அசா ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** . இல்லை

**மறுவிசாரணை** . இல்லை

K.Karthik

District Munsif cum Judicial Magistrate Sholinganallur
2024.11.13 15:53:54 +0530